# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.10 /2015**

திரு. P.N.R. ஜெயராமன்,
136/1, ராமலட்சுமி ரைஸ்மில்,
விடத்தக்குளம்,
திருமங்கலம் ........மேல் முறையீட்டாளர்
(திரு. P.N.R. ஜெயராமன் &
திரு. அனந்தராமன்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர்,
மதுரை– 625 007. ......... எதிர்மனுதாரர்
(திரு. K.முத்துராமலிங்கம், உதவி செயற்பொறியாளர் /கப்பலூர் )

**கேட்புரை நாள்: 31–3–2015,20.5.2015 & 14.7.2015**

**ஆணை நாள் : 7–9–2015**

1. திரு. P.N.R. ஜெயராமன், விடத்தக்குளம், திருமங்கலம் அவர்களின் 22.1.2015 நாளிட்ட மேல்முறையிட்டு மனு மேல்முறையீட்டுமனு எண். 10/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 31.3.2015, 20.5.2015 மற்றும் 14.7.2015 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரையின்பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் சர்வீஸ் வயரை மாற்றம் செய்ய ஆட்சேபனை செய்யும் திரு. ஆர். ராமசாமி அவர்களின் வாதுரை ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

1. **<u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை</u>**

மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான அரிசி ஆலையின் வழியாக அடுத்தவரின் வீட்டின் மின்இணைப்பிற்கு செல்லும் சர்வீஸ் வயர்களை மாற்றவேண்டும் என்றும், அவரின் நிலத்தில் நடப்பட்டுள்ள மின் கம்பத்தையும்அகற்ற வேண்டும் என்று கோரியுள்ளார்.

2. **<u>வழக்கின் சுருக்கம்</u>**

2.1 மேல்முறையீட்டாளர் திரு. P.N.R. ஜெயராமன், அவர்களுக்கு சொந்தமான ராமலெட்சுமி ரைஸ் மில்லின் நிலத்திலுள்ள மின் கம்பத்திலிருந்து மின்னிணைப்பு எண். 137–010–67, 137–010–08 மற்றும் 137–010–52 ஆகிய மூன்று மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அந்த மின் இணைப்பின் சர்வீஸ் வயர்கள் மேல்முறையீட்டாளரின் நிலத்தின் வழியாகத்தான் அமைக்கப்பட்டிருந்தது.

2.2 அவற்றில் 137–010–67 மற்றும் 137–010–68 ஆகிய மின் இணைப்பின் சர்வீஸ் வயர்கள் மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளின்படி அகற்றப்பட்டுவிட்டன,ஆனால், மின் இணைப்பு எண.137–010–52இன் உரிமையாளர் தன்னுடைய நிலத்தின் வழியாக மேற்கண்ட சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க எதிர்ப்பு தெரிவிப்பதால் மாற்றி அமைக்க முடியவில்லை.

2.3 மேல்முறையீட்டாளர் தன்னுடைய முறையீட்டை மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பித்திருந்தார். மன்றம் முறையீட்டாளர் ஆட்சேபனையை நீக்கிதரவேண்டும் அல்லது மாற்றுபாதையை தேர்வு செய்து அளிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க பரிசீலனை செய்யவேண்டும் என்று தீர்வு செய்துள்ளது. மேற்கண்ட தீர்வில் திருப்தியில்லாததால் மேல்முறையீட்டாளர் இந்த மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

## 3. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்

3.1 மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், விடத்தக்குளம் கிராமத்தில் அவருக்கு ஒரு அரிசி ஆலை உள்ளது.

3.2 அந்த அரிசி ஆலையின் தண்ணீர் தொட்டிகளுக்கு மேல் குறுக்காக அடுத்த வீட்டாரின் மின்இணைப்பு செல்கின்றது. இது பலமுறை அறுந்து விழுந்து பல இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள். எனவே, இந்த மின்இணைப்பை மாற்றி அமைக்க வேண்டியது மிக அவசியம்.

3.3 மேலும், ரைஸ்மில்லில் நடுவில் நடப்பட்டுள்ள மின்கம்பத்தை மாற்றியமைக்க ஆவண செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 4. எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்

4.1 மின்இணைப்பு எண்.137–010–67, 137–010–68 மற்றும்137–010–52 ஆகியவற்றின் சர்வீஸ் வயர்கள் மேல்முறையீட்டாளரின் நிலத்தின் வழியாக சர்வீஸ் வழங்கும் பொழுது எடுத்து செல்லப்பட்டுள்ளன. மேற்கண்ட மூன்று மின்னிணைப்புகளும் IA என்ற பட்டியலின்கீழ் வருகின்றன.

4.2 மேல்முறையீட்டாளர், மேற்கண்ட மூன்று மின்னிணைப்புகளையும் மாற்றுப்பாதை வழியாக மாற்றி அமைக்க வேண்டும் என்று 17.6.2014 அன்று மக்கள் குறைதீர்க்கும் நாளில் மேற்பார்வை பொறியாளர் மதுரை மின்பகிர்மான வட்டத்திற்கு மனு செய்திருந்தார்.

4.3 மேற்கண்ட மூன்று மின்இணைப்பின் நுகர்வோர்களும் தங்களுடைய சர்வீஸ் வயர்களை மாற்றுபாதையின் வழியாக எடுத்து செல்ல வாய்மொழியாக சம்மதம் தெரிவித்ததின்பேரில் மேல்முறையீட்டாளரிடம் சர்வீஸ் வயரை மாற்றி அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை பெறப்பட்டு மின்இணைப்பு எண்.137–010–67 மற்றும் மின்இணைப்பு எண்.137–010–68 ஆகியவற்றின் சர்வீஸ் வயர்கள் மாற்றி அமைக்கப்பட்டுவிட்டன.

4.4 மின் இணைப்பு எண்.137–010–52இன் நுகர்வோர் சர்வீஸ் வயரை மாற்று வழியில் மாற்றியமைக்க ஆட்சேபனை தெரிவித்துள்ளார். மேலும், மின் இணைப்பு எண்.137–010–67

மற்றும் 137–010–68 ஆகியவற்றின் நுகர்வோர்களும் தங்களுடைய வீட்டின் வழியாக 137–010–52ன் சர்வீஸ் வயரை மாற்றியமைக்க ஆட்சேபனையை தெரிவித்துள்ளார்.

4.5 மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்திருந்தார். மன்றமும் இருதரப்பினரின் வாதங்களை கேட்ட பின்பு, மேல்முறையீட்டாளர் ஆட்சேபனைகளை நீக்கும் பட்சத்தில் உரிமம்தாரர் மாற்றுபாதைவழியாக மின்இணைப்பின் சர்வீஸ் வயரை கொண்டு செல்ல பரிசீலனை செய்யவேண்டும் என்று உத்தரவு இட்டுள்ளது.

4.6 மின்பகிர்மான வட்டம் மற்றும் உற்பத்தி கழகத்தின் விதிகளின்படி ஆட்சேபனைகளை நீக்கித்தரவேண்டியது மேல்முறையீட்டாளரின் கடமையாகும்.

4.7 மேல்முறையீட்டாளர் ஆட்சேபனையை நீக்கித்தரும்பட்சத்தில் மின்னிணைப்பு எண்.137–010–52இன் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்கலாம்.

5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதத்தை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 31.3.2015, 20.5.2015 மற்றும் 14.7.2015 ஆகிய நாட்களில் மின்குறைதீர்ப்பாளர் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளர் திரு. P.N.R. ஜெயராமன் அவர்கள் 31.3.2015 மற்றும் 20.5.2015 ஆகிய நாட்களில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார். அவரின் புதல்வர் திரு. அனந்தராமன் 14.7.2015 அன்று கேட்புரையில் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

5.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. R.முத்துராமலிங்கம், உதவி செயற்பொறியாளர்/கப்பலூர் அவர்கள் 31.3.2015, 20.5.2015 மற்றும் 14.7.2015 ஆகிய நாட்களில் கலந்துகொண்டு தம்முடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

5.4 மின் இணைப்பு எண்.137–010–52இன் உரிமையாளர் திரு. ஆர். ராமசாமி அவர்கள் மின் இணைப்பின் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க ஆட்சேபனை செய்ததால் அவரின் தரப்பு

வாதங்களை கேட்கவும் திரு. ஆர்.ராமசாமி அவர்கள் 14.7.2015 நடைபெற்ற கேட்புரைக்கு அழைக்கப்பட்டு அவரும் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரையின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

6.1 மேல்முறையீட்டாளர் P.N.R. ஜெயராமன் அவர்கள் அவர்களின் ரைஸ்மில்லின் நடுவே நடப்பட்டுள்ள மின்கம்பத்திலிருந்து அடுத்தவர் வீட்டிற்கு செல்லும் மின்இணைப்பிற்கான சர்வீஸ் வயர்களை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் அவரின் நிலுத்திலுள்ள, மின் கம்பமும் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று கோரினார்.

6.2 மேலும், அடுத்தவர்களின் வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குவதற்காக அவரின் நிலம் வழியாக மின்இணைப்பு வயர்களை கொண்டு செல்ல ஆட்சேபனை செய்ததாகவும், ஆனால், தேவைப்படும் பொழுது மாற்றி அமைத்துக்கொள்ளலாம் என்ற வாரிய அலுவலர்களின் ஆலோசனைப்படியும் அந்த சமயத்தில் மேற்கண்ட வீடுகளுக்கு மின்இணைப்பு வழங்க மாற்றுப்பாதை இல்லாததாலும், தன்னுடைய தந்தையார் வாய் மொழியாக அனுமதி அளித்தார் என்றும் தற்பொழுது மின்இணைப்புக்கு செல்லும் சர்வீஸ் வயர் அரிசி ஆலையின் தண்ணீர் தொட்டிக்கு மேல் செல்வதால் அறுந்துவிழும்பொழுது ஆபத்துகள் ஏற்படும் என்பதால், மாற்றவேண்டும் என்றும், மேலும், மேற்கண்ட மின்இணைப்பிற்கு பொது சாலையிலுள்ள வேறு மின் கம்பங்களிலிருந்து மின் இணைப்பு வழங்க வழியுள்ளது என்பதாலும் தன்னுடைய நிலுத்திலுள்ள கம்பத்திலிருந்து செல்லும் மின் இணைப்பு வயரை மாற்றி அமைக்க வேண்டும் என்று வாதிட்டார்.

6.3 மேலும், அவரின் நிலத்தின் நடுவிலுள்ள மின்கம்பத்தையும் (service pole) அகற்றவேண்டும் என்றும் மேற்கண்ட மாற்றியமைக்கும் வேலைகளுக்கு ஆகும் செலவு தொகையை அவர் செலுத்த சம்மதிப்பதாகவும் வாதிட்டார்.

7. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 திரு. K.முத்துராமலிங்கம் உதவி செயற்பொறியாளர்/கப்பலூர் அவர்கள் கலந்துகொண்டு எதிர்மனுதாரரது பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 திரு. ஆர். ராமசாமி அவர்கள் மின் இணைப்பு எண்.137–010–52 என்ற மின்இணைப்பின் சர்வீஸ் வயரை ஏற்கனவே உள்ள மின் கம்பத்திலிருந்து மாற்றுவதற்கு தன்னுடைய எழுத்துபூர்வமான ஆட்சேபனையை கொடுத்துள்ளார் என்று 14.7.2014 அன்று உதவி மின் பொறியாளர்/ கிழக்கு அலுவலகத்தில் பெறப்பட்ட கடிதத்தின் நகலை சமர்ப்பித்தார்.

7.3 உதவி செயற்பொறியாளர், பொது சாலையிலுள்ள வேறு மின் கம்பத்திலிருந்து மின் இணைப்பு எண்.137–010–52ற்கு மின்சாரம் வழங்கமுடியும் என்றும், ஆனால், அந்த மின்இணைப்பின் உரிமையாளர் ஏற்கனவே இருக்கும் மின் கம்பத்திலிருந்து சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க ஆட்சேபனை தெரிவிப்பதால் அந்த ஆட்சேபனையை மின்இணைப்பின் சர்வீஸ் வயரை மாற்ற வேண்டும் என்று கோரும் மேல்முறையீட்டாளர்தான் நிவர்த்தி செய்து தரவேண்டும் என்றும் வாதாடினார். ஆட்சேபனையை நீக்கி திரு. ராமசாமி அவர்களின் சம்மத கடிதத்தை பெற்றுதந்தால் சர்வீஸ் வயரை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாதிட்டார்.

7.4 மின் இணைப்பு எண்.137–010–67 மற்றும் 137–010–68 ஆகியவற்றினை மாற்றி அமைத்துள்ள மின் கம்பத்திலிருந்து மின் இணைப்பு எண்.137–010–52ன் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்கும் பொழுது தங்களின் நிலத்தின் வழியாக செல்லக்கூடாது என்று மேற்கண்ட மின் இணைப்பின் உரிமைதாரர்கள் ஆட்சேபனை கடிதம் கொடுத்துள்ளார்கள் என்றும் வாதிட்டார்.

7.5 அடுத்த மாற்றுபாதையின் வழியாக சர்வீஸ் வயரை எடுத்துச் செல்ல திரு. ஆர். ராமசாமி அவர்களும் ஆட்சேபிக்கின்றார் என்றும் வாதுரை புரிந்தார்.

**8. <u>சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க ஆட்சேபனை தெரிவித்துள்ள திரு. ஆர். ராமசாமி விடத்தகுளம் அவர்கள் 14.7.2015 அன்று எடுத்துரைத்த வாதங்கள்</u>**

8.1 மின்இணைப்பு எண்.137–010–52ன் உரிமையாளர் திரு. ஆர். ராமசாமி, விடத்தக்குளம் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

8.2 திரு. ஆர். ராமசாமி அவர்கள் தன்னுடைய வீட்டிற்கு சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க வாரியம் தெரிவித்திருக்கும் மாற்றுப் பாதையானது தன்னுடைய புதல்வர்கள் திரு. சுந்தரமூர்த்தி மற்றும் திரு.மணிகண்டனுக்கு சொந்தமானது என்று அந்த நிலத்தில் இருவரும் வீடுகள் கட்ட உத்தேசித்துள்ளதால் அந்த நிலத்தின் வழியாக மின்பாதை அமைக்க முடியாது என்று வாதிட்டார்.

8.3 மேலும், தன்னுடைய புதல்வர்களில் ஒருவர் வீடுகட்ட ஏற்பாடு செய்து கொண்டிருப்பதால் அந்த வீட்டின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்புதான் மாற்று மின்பாதை அமைக்க வழி உள்ளதா என்று தெரியும் என்றும் வாதுரை புரிந்தார். எனவே, தற்சமயம் சர்வீஸ் வயரை மாற்றமுடியாது என்றும் வாதிட்டார்.

9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இந்த வழக்கல் மேல்முறையீட்டாளரின் வேண்டுகோள் அவருடைய அரிசி ஆலை இருக்கும் அவருடைய நிலத்தின் வழியாக செல்லும் சர்வீஸ் வயர்களையும் அவரின் இடத்தில் அமைந்துள்ள மின் கம்பத்தையும் அகற்ற வேண்டும் என்பது ஆகும்.

9.2 மேல்முறையீட்டாளர் அவருடைய அரிசி ஆலையின் தண்ணீர் தொட்டிகளுக்கு மேல் குறுக்காக செல்லும் மின் இணைப்பு எண்.137–010–52இன் வயர் அடிக்கடி அறுந்து விழுந்து இன்னல்களை கொடுப்பதால் அந்த சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் அவருடைய நிலத்திலுள்ள மின் கம்பத்தையும் அகற்ற வேண்டும் என்றும் கோரியுள்ளார். மேலும், மேற்கண்ட மின்இணைப்பு எண்.137–010–52இற்கு பொது சாலையிலுள்ள மின்கம்பத்திலிருந்து மின் இணைப்பு வழங்க முடியும் என்று வாதிட்டு அந்த முறையில் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

9.3 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பின் சர்வீஸ் வயரை அவருடைய நிலத்திலுள்ள மின் கம்பத்திலிருந்து வேறு மின் கம்பத்திற்கு மாற்றி அமைப்பதற்கும் அந்த மின்கம்பத்தை அகற்றுவதற்கு ஆகும் செலவையும் தான் செலுத்த சம்மதிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

9.4 எதிர்மனுதாரர் மின் இணைப்பு எண்.137–010–52இன் உரிமையாளரான திரு. ஆர். ராமசாமி அவர்கள் ஏற்கனவே உள்ள கம்பத்திலிருந்து மாற்றி அமைப்பதற்கு ஆட்சேபனை செய்வதால் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க கோரும் மேல்முறையீட்டாளர் மாற்றுப்பாதை அமைப்பதற்கு வேண்டிய ஆட்சேபனையற்ற மாற்றுபாதையை தெரிவிக்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார். திரு. ஆர். ராமசாமி ஆட்சேபனை செய்கிறார் என்பதற்கு ஆதாரமாக 14.7.2014 அன்று பெறப்பட்ட அவரின் மனுவின் நகலை சமர்ப்பித்துள்ளார்.

9.5 மேலும், மேற்கண்ட மின் கம்பத்திலிருந்து மாற்றியமைக்கப்பட்ட மின் இணைப்பு எண.137–010–67 மற்றும் 137–010–68ன் உரிமையாளர்கள் தங்களின் வீட்டின் வழியாக மின் இணைப்பு எண்.137–010–52இன் சர்வீஸ் வயரை கொண்டு செல்ல ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள் என்றும் வாதிட்டுள்ளார். மேலும், மேற்கண்ட வாதத்திற்கு ஆதாரமாக மின் இணைப்பு எண்.137–010–68ன் உரிமையாளர் திரு. K.N.R. சுப்பையா அவர்களின் ஆட்சேபனை மனுவின் நகலையும் மின் இணைப்பு எண்.137–010–67இன் உரிமையாளர் திரு. K.N.R. கிச்சணன் அவர்களின் ஆட்சேபனை மனுவின் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

9.6 மின் இணைப்பு எண்.137–010–52இன் உரிமையாளரான திரு. ஆர். ராமசாமி அவர்கள் 14.7.2015 அன்று நடந்த கேட்புரையில் கலந்து கொண்டு தன்னுடைய மின் இணைப்பின் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க வாரியம் தெரிவிக்கும் மின்பாதையானது அவருடைய புதல்வர்கள் திரு. சுந்தரமூர்த்தி மற்றும் திரு. மணிகண்டனுக்கு சொந்தமான நிலத்தின் வழியாகத்தான் அமைக்க வேண்டியது உள்ளது என்றும் அவர்கள் இருவரும் மேற்கண்ட இடத்தில் வீடுகட்ட உத்தேசித்துள்ளதால் அந்த நிலத்தின் வழியாக மின்பாதை அமைக்க முடியாது என்று வாதிட்டுள்ளார். மேலும், அந்த இடம் திரு.சுந்தரமூர்த்திக்கு சொந்தம் என்பதற்கு ஆதாரமாக வட்டாட்சியர் திருமங்கலம் அவர்களால் அளிக்கப்பட்ட கிராமங்களில் வீட்டு மனைகளை ஒப்படை செய்வது விஷயமாய்ப் பிறப்பிக்கப்படும் உத்தரவின் 1.12.2000 நாளிட்ட நமூனா மற்றும் திரு. ஆர். மணிகண்டனுக்கும் சொந்தமாக உள்ளது என்பதற்கு ஆதாரமாக 4.3.2014 நாளிட்ட

திரு. ஆர். ராமசாமி அவர்களால் எழுதிகொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் நகலையும் அளித்துள்ளார்.

9.7 இந்த மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான மின் இணைப்பு எண்.137–010–52இன் சர்வீஸ் வயரை தற்போது உள்ள மின் கம்பத்தலிருந்து மாற்றி அமைக்க இரண்டு மாற்றுப்பாதைகள் உள்ளன என்று தெரிகிறது. முதலாவது மாற்றுபாதை விடத்தக்குளம் துணைமின் நிலையம்–1இன் சப்ளையிலிருந்து திரு. K.N.R. சுப்பையா மற்றும் திரு. K.N.R. கிச்சணன் இருவருக்கும் சொந்தமான நிலத்தின் வழியாக அமைக்கப்படவேண்டும். ஆனால், அந்த பாதை வழியாக சர்வீஸ் வயரை கொண்டு செல்ல இருவரும் ஆட்சேபனை செய்கிறார்கள் என்பது 13.1.2015 நாளில் பெறப்பட்டுள்ள அவர்களின் ஆட்சேபனை கடிதங்களின் மூலமாக தெரிகிறது. எனவே, அந்த பாதையில் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க முடியாது என்று தெரிகிறது.

9.8 அடுத்த மாற்றுவழிபாதை விடத்தக்குளம் துணை மின் நிலையம்–VIIஇன் சப்ளையிலிருந்து திரு. ஆர்.ராமசாமி அவர்களின் புதல்வர்களான திரு. சுந்தரமூர்த்தி மற்றும் மணிகண்டன் அவர்களுக்கு சொந்தமான நிலத்தின் வழியாக அமைக்க வேண்டும். அந்த நிலம் அவர்கள் இருவரும் வீடுகட்டுவதற்காக கொடுக்கப்பட்டுள்ள நிலம் என்றும் எனவே, அந்த வழியாகவும் தற்பொழுது மின்பாதை அமைக்க முடியாது என்று திரு. ஆர். ராமசாமி வாதிட்டுள்ளார். மேலும், வீடுகட்ட ஆரம்பித்த பின்புதான் அங்கு மின்பாதை அமைக்க வாய்ப்பு உள்ளதா என்பதை அறியமுடியும் என்றும் எனவே, தற்பொழுது சர்வீஸ் வயரை அந்த வழியாக கொண்டு செல்ல முடியாது என்றும் வாதிட்டுள்ளார். எனவே, இரண்டு வழிகளிலும் மின்பாதை அமைப்பதற்கு தற்பொழுது ஆட்சேபனை உள்ளது என்று தெரிகிறது.

9.9 ஒரு மின்பாதையை மாற்றி அமைப்து பற்றி தெரிந்து கொள்ள நாம் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(6)ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***“5. Miscellaneous charges***
***xxx xxx xxx***
***xxx xxx xxx***
***(6)Service / line, structure and equipments shifting charge***

*(1) The cost of shifting service / line, Structure and equipments shall be borne by the consumer. The consumer shall pay the estimated cost of shifting in advance in full. The copy of the estimate shall be given to the consumer. The shifting work will be taken up only after the payment is made. The estimate will cover the following:—*

*i. Materials dismantled in the old site and reusable shall be used in the new site as far as possible.*
*ii. 10% of the present value of the dismantled and reusable materials towards charges for dismantling and charges for loading unloading transport to the new site/store.*
*iii. Cost of the new materials required for the shifting work.*
*iv. Add 5% of the cost of new materials towards loading unloading and transport to new site.*
*v. Add 10% of the present value of all the materials to be erected in the new site towards erection charges. vi. 5% of the present value of retrievable scrap materials towards charges.*
*vii. Due credit shall be given to the consumer/applicant as below but however limited to the total estimated cost of new work.*
*(a) Book value/written down value subject to a minimum of 20% of the cost of retrievable and reusable materials but not used in the new site.*
*(b) Scrap value on the retrievable but not reusable materials at not less than 10% of its original value. (viii) After completion of the work revised estimate shall be prepared with a copy to the consumer based on the actual cost of materials loading unloading transport and erection charges if the original estimate cost is more than the revised estimate the balance shall be refunded to the applicant/consumer within 3 months. If the original estimate cost is less than the revised estimate the difference shall be collected from the application/consumer."*

9.10 மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, ஒரு மின்பாதையை மாற்றி அமைக்க வேண்டும் எனில், அதற்கு ஆகும் செலவு தொகையை மின்பாதையை மாற்ற கோரும் நுகர்வோர் செலுத்த வேண்டும் என்றும் அவ்வாறு செலவு தொகையை செலுத்திய பின்புதான் மின்பாதை மாற்றி அமைக்கப்படும் என்று தெரிகிறது.

9.11 ஒரு மின்பாதையை மாற்றி அமைக்க வேண்டும் எனில் கீழ்கண்டவைகளை ஆராய வேண்டும்.

(i) தொழில்நுட்ப கூறின்படி மாற்றியமைக்க சாத்தியக்கூறு(Technical feasibility) உள்ளதா ?

(ii) மாற்றுப்பாதையில் மின்பாதை அமைக்க வழியுரிமை (Right of way) உள்ளதா ? மற்றும்

(iii) மின் பாதையை மாற்றி அமைக்க ஆகும் செலவை யார் ஏற்றுக் கொள்ளவேண்டும் ?

9.12 இந்த வழக்கில் எதிர்மனுதாரர் தொழில்நுட்ப கூறின்படி மின்பாதையை அமைக்க முடியாது என்று வாதிடவில்லை. எனவே, சர்வீஸ் வயரை மாற்றுவதில் தொழில்நுட்ப கூறுகளின்படி தடை இல்லை. மேலும், செலவு தொகையை மேல்முறையீட்டாளர் ஏற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளதால் செலவு தொகையை ஏற்றுக் கொள்வதிலும் மாற்றுக்

கருத்து இல்லை என்று தெரிகிறது ஆனால் மாற்றுபாதை வழியாக சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க ஆட்சேபனை உள்ளது என்று அறிய முடிகிறது.

**9.13** எதிர்மனுதாரர் சர்வீஸ் வயரை மாற்றியமைக்க ஆட்சேபனையற்ற மாற்றுபாதையை மேல்முறையீட்டாளர் தெரிவித்தால் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க அவர்கள் தயார் என்று தெரிவித்துள்ளதாலும், மேல்முறையீட்டாளர் தான், சர்வீஸ் வயரை மாற்ற வேண்டும் என்று கோருவதால், அவர்தான் மின் இணைப்பு எண்.137–010–52இன் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க ஆட்சேபனையற்ற ஒரு மாற்று வழியை தெரிவிக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.** **<u>முடிவுரை</u>**

**10.1** மேற்கண்ட பத்தி எண்.9.13இல் உள்ள தீர்வின்படி மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.2** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டாளர் மனு எண்.10/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. P.N.R. ஜெயராமன்,
136/1, ராமலட்சுமி ரைஸ்மில்,
விடத்தக்குளம்,
திருமங்கலம்

2) மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர்,
மதுரை– 625 007.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர், மதுரை– 625 007.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.